

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2023) சேலம் மாநகராட்சியின் சார்பில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் சேலம் மாநகரில் மறுசீரமைக்கப்பட்ட நேரு கலையரங்கம், பெரியார் பேரங்காடி, வ.உ.சி. மார்க்கெட், போஸ் மைதான வணிக வளாகம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் ஆர். ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் பொன். கௌதம் சிகாமணி, எஸ்.ஆர். பார்த்திபன், ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், துணை மேயர் திருமதி மா. சாரதா தேவி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிர்வாக இயக்குநர் பா.பொன்னையா, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2023) சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாகனங்களை வழங்கி, கலந்துரையாடினார். உடன் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம் உள்ளார்.

### முதல்வரின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ்

# திறன் பயிற்சி பெற்ற 1,425 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூன் 13-

முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 1425 பேருக்கு பணி நியமன ஆணைகளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம் 10.06.2023 அன்று சென்னை பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இம்முகாமில் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட 1425 பேருக்கு பணி நியமன ஆணைகளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்வழங்கினார்.

விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:-

மாணவர்களுக்கு துறை சார்ந்த திறன் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமென்ற நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்ட மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான திட்டம் “நான் முதல்வன்” திட்டம். இத்திட்டத்தின் மூலம் கல்லூரி மாணவர்களுக்கு நவீன பாடப்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கி அவர்களுக்குத் தகுதியான வேலைவாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்குடன் துவங்கப்பட்ட ஓராண்டிலேயே பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் 13 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளித்து ‘நான் முதல்வன்’ திட்டம் சாதனை புரிந்துள்ளது.

பொறியியல் கல்லூரிகளில் துவங்கப்பட்ட இத்திட்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் என உயர் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கான வேலை வாய்ப்புடன் கூடிய சிறந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அந்தந்த கல்லூரி வளாகங்களிலேயே வழங்கி வருகிறது.

இத்தகைய திறன் பயிற்சி பெற்ற மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறும் நோக்கில் பொறியியல் கல்லூரிகளில் இதுவரை நடைபெற்ற வளாக வேலை வாய்ப்பு முகாம்களில் 64,943 மாணவர்கள் பணிவாய்ப்பு பெற்றுள்ளார்கள் என்பதையும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 78,196 மாணவர்கள் பணி வாய்ப்பு பெற்றுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து இம்மாதம் இறுதிவரை இதுபோன்ற முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது .

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த வேலை வாய்ப்பு முகாமில் செயின்ட் கோபின் (Saint Gobain), மைக்ரோ சாப்ட் (Microsoft SAP, Edunet), மிஸ்டர் கூப்பர் (Mr.Cooper), டெக் மகேந்திரா (Tech Mahindra), ஆதித்யா பிர்லா (Aditya Brila Group), பைஜீஸ் (Byjus), பிளிப்காட் (Flipcart), ஹெச்டி எப்.சி. (HDFC), ஐ.சி.ஐ.சி.ஐ. ( ICICI), இந்தியா சிமெண்ட்ஸ் (India Cements), பாக்ஸ் கான் (FoxCon) முத்தூட் பைனான்ஸ் (Muthoot Finance), சுதர்லேண்ட் (Sutherland), ஸ்டார் ஹெல்த் (Star Health Alliance ) போன்ற முன்னணி நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1425 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மை செயலாளர் மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் ககன் தீப் சிங் பேடி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ..இன்னசென்ட் திவ்யா, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் டாக்டர்.ஜெயப்பிரகாசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர்களாக சுப்ரியா சுலே, பிரபுல் படேல் நியமனம்!

## தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார் அறிவிப்பு!

மும்பை, ஜூன் 13 -

1999ம் ஆண்டு காங்கிரசில் இருந்து விலகிய சரத்பவார் மற்றும் பி.ஏ. சங்மா ஆகியோர், அதே ஆண்டில் தேசியவாத காங்கிரஸ் கட்சியை தொடங்கினர்.

**25வது கட்சியின் நிறுவன நாள்!**

சரத்பவார் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால், அந்த மாநிலத்தில் தேசியவாத காங்கிரஸ் தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கி வருகிறது. இந்த நிலையில் தேசியவாத காங்கிரசின் 25வது ஆண்டு நிறுவன நாள் விழா டெல்லியில் நடந்தது. இதில் சரத்பவார் கட்சியின் தேசிய செயல் தலைவராக தனது மகள் சுப்ரியா சுலே எம்.பி.யை அறிவித்தார். மேலும் அவரை கட்சியின் மத்திய தேர்தல் குழு தலைவராகவும் நியமித்தார். தேர்தல் குழு தலைவர் என்பதால், தேர்தல் நேரங்களில் வேட்பாளர்களை தேர்வு செய்யும் பெருமளவு அதிகாரம் சுப்ரியா சுலேவுக்கு கையில் இருக்கும்.

இதேபோல கட்சியின் மற்றொரு தேசிய செயல் தலைவராக முன்னாள் மத்திய மந்திரி பிரபுல் படேலையும் சரத்பவார் அறிவித்தார். இதில் புதிய செயல் தலைவரான சுப்ரியா சுலேக்கு மராட்டியம், அரியானா, பஞ்சாப் மாநில பொறுப்புகள் மற்றும் பெண்கள் அணி, இளைஞர் அணி, மாணவர் அணி பொறுப்புகளும் வழங்கப்பட்டு உள்ளன. பிரபுல் படேலுக்கு மத்திய பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், ஜார்கண்ட், கோவா மாநிலங்களின் பொறுப்புகள் வழங்கப்பட்டு உள்ளன.

சமீபத்தில் கட்சி தலைவர் பதவியில் இருந்து விலகப்போவதாக சரத்பவார் அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார். கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் வற்புறுத்தலால் அவர் தனது முடிவை திரும்ப பெற்றார். அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் அடுத்த ஆண்டு இறுதியில் மராட்டிய சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. மேலும் தேசியவாத காங்கிரஸ், தேசிய கட்சி என்ற அந்தஸ்தையும் சமீபத்தில் இழந்தது. இதனை கவனத்தில் கொண்டு கட்சியை வலுப்படுத்தும் நோக்கில், மேற்கண்ட புதிய நியமனங்களை சரத்பவார் அறிவித்து உள்ளார். குறிப்பாக கட்சியில் அவரது மகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

அதேவேளையில் மராட்டிய சட்டசபை எதிர்க்கட்சி தலைவராக உள்ள சரத்பவாரின் அண்ணன் மகன் அஜித்பவாருக்கு கட்சியில் முக்கிய பொறுப்புகள் எதுவும் வழங்கவில்லை. அஜித்பவார் பா.ஜனதாவுடன் கூட்டணி சேர முயற்சித்து பரபரப்பை ஏற்படுத்தியவர் ஆவார். இருப்பினும் அஜித்பவார் முன்னிலையிலேயே புதிய நியமனங்களை சரத்பவார் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துவோம்!

# மயிலாடுதுறை மாவட்டத்தில் பொற்கிழி - நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நாகை, ஜூன் 13-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே. ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற் றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. பேசினார்.

கூட்டத்தில் மாவட்டத் துணைச் செயலாளர்கள் மு. ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி. எம்.ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.கபிலன், எஸ். சங்கரநாராயணன், நத்தம் ஏ. வின்செண்ட், பி.சிவதாஸ், பி. கென்னடி, அ.காந்தி, ஹர்சத், சுபாநெடுஞ்செழியன், ஒன்றியச் செயலாளர்கள் செல்ல சேது.ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், என்.இளையபெருமாள், ஏ.ஜி.ஜெ.பிரபாகார், பஞ்சு.குமார், பி.எம். அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமுர்த.விஜயகுமார், மூவலூர் எம்.மூர்த்தி, ப.முருகமணி, மங்கை எம்.சங்கர், ஞான.இமையநாதன், கு,வைத்தியநாதன், ஏ.ஆர். ராஜா, நகரச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர்ச் செயலாளர்கள் எம்.சம்சுதீன், எம்.அன்புச்செழியன், என். அண்ணாதுரை, எஸ்.கே. முத்து ராஜா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் வி. சௌமியன், வி.எஸ்.என்.செந்தில், இராம.சேயோன், செல்வராஜ், பெருவீரமணி, லதா சுப்ர மணியன், முத்து குபேந்திரன், கே.விக்னேஷ், ஒன்றியக் குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ், மகேந்திரன், கமலஜோதி தேவேந்திரன், மாவட்டப் பிரதிநிதி தென்னரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

ஒரு செங்கலால் ஒன்றிய அரசின் முகத்திரையை கிழித்த, நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்கள், ஊரக உள்ளாட்சி, நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களில் சுற்று சுழன்று பணியாற்றிய, தேர்தல்களில் கழகம் வெற்றிக்கு உழைத்திட்ட, இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வரும் 21ம் தேதி பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம், கொடி ஏற்று விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகளை சிறப்பாக செய்வது என்றும், மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தரும் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட எல்லையில் சிறப்பான வரவேற்பு வழங்கிடுவது என்றும்

கழகத் தலைவர் அவர்களால் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மீண்டும் பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ள சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதனுக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வது என்றும்

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தற்போது அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் சிறப்பாக நடைபெற்று வரும் கழக புதிய உறுப்பினர் சேர்க்கும் பணியை மேலும் தீவிரபடுத்தி தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இலக்குகளை முடித்து, பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தை உடன் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்களை கேட்டுக் கொள்வது என்றும்,

காவிரி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணை ஜூன் 12ம் தேதி திறந்து வைத்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, மயிலாடுதுறை மாவட்டத்தில் வாய்க்கால் தூர் வாரும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து வாய்க்கால்களை முன் கூட்டியே தூர் வாரிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து, “ கையில் துப்பாக்கி, வாள் இல்லாதவர்கள் இந்துக்களாக இருக்கவே தகுதியில்லை” என்று உத்தரப் பிரதேச மடாதிபதி யுவராஜ் என்பவர் பேசி இருக்கிறாரே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; கொலை வெறியைத் தூண்டும் வகையில் அந்த சாமியார் அப்படிப் பேசி இருக்கிறார்.**

**உத்தரப் பிரதேச முதலமைச்சராக யோகி ஆதித்யநாத் என்ற அந்த சாமியார் இருக்கும் தைரியத்தில், இந்த சாமியார் யுவராஜ் அப்படி வன்முறை போதனையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார். எனினும் யுவராஜ் இதுவரை கைது செய்யப்படவில்லை. அங்கே நடப்பது பா.ஜ.க. ஆட்சி ஆயிற்றே !**

**சாமியார் யுவராஜின் கருத்துப்படி பார்த்தால், இந்தியாவில் மிகப் பெரும்பான்மையான இந்துக்கள் கையில் துப்பாக்கியோ, வாளோ இல்லாத நிலையில், “ இந்துக்கள்” இல்லைதான்; ‘இந்துக்கள்’ என்று தம்மை அழைத்துக்கொள்ளத் தகுதி அற்றவர்கள்தான்!**



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ‘தமிழ்ச்சுரங்கம்’ எடுத்த முதல் விழாவில் பேராசிரியர் ஆறு அழகப்பன் எழுதிய ஏழு நூல்கள் அன்பகம் அரங்கில் நேற்று முன்தினம் (11.6.2023) வெளியிடப்பட்டன. தஞ்சை தமிழ் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் தலைமையுரை நிகழ்த்த, கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் வாழ்த்துரை வழங்கினார். இதில் தொழிலதிபர் வி.ஜி.சந்தோசம், ஒருங்கிணைப்பாளர் வா.மு.சே. திருவள்ளுவர் பூ.சி.இளங்கோவன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.